elections markham

Markham Civic Centre
101 Town Centre Boulevard
Markham, Ontario, L3R 9W3

**வார்டு:**
**பள்ளி வாரிய ஆதரவு:**
**சொத்து முகவரி:**

## வாக்களிக்கும் நாட்கள்

**தொடக்கம்:** அக்டோபர் 16 காலை 10 மணிக்கு (ET)

**முடிவு:** அக்டோபர் 26 இரவு 8 மணிக்கு (ET)

# வாக்காளர் தகவல் கடிதம்

## 2026 மார்க்கம் நகராட்சி தேர்தல்

## உங்கள் வாக்களிப்பு PIN:

உங்கள் இணைய உலாவியில் **vote.ElectionsMarkham.ca** என உள்ளிடவும்

## வாக்களிக்க, நீங்கள் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:

- குறைந்தது 18 வயதுடையவராக இருக்க வேண்டும் (அக்டோபர் 26, 2026 அன்று); மேலும்,
- கனடா நாட்டின் குடிமகனாகஇருக்க வேண்டும்; மேலும்,
- மார்க்கம் நகரில் வசிப்பவராக, நில உரிமையாளராக அல்லது வாடகைதாரராக (அல்லது அவர்களில் ஒருவரின் துணைவராக) இருக்க வேண்டும்.

## நான் எந்தப் பதவிகளுக்கு வாக்களிக்கிறேன்?

- மேயர்
- பிராந்திய மன்ற உறுப்பினர்கள்
- வார்டு மன்ற உறுப்பினர்கள்
- பள்ளி வாரிய அறங்காவலர்கள்

## ஆன்லைனில் வாக்களிப்பது எப்படி:

- கணினி, டேப்லெட் அல்லது ஸ்மார்ட்ஃபோன் மூலம் எங்கிருந்தும், எந்த நேரத்திலும் வாக்களிக்கவும்
- உங்கள் சாதனத்தில் இணைய உலாவியின் சமீபத்திய பதிப்பு நிறுவப்பட்டிருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தவும்
- உங்கள் வாக்களிப்பு PIN மற்றும் பிறந்த தேதியைப் பயன்படுத்தி வாக்களிப்பு இணையதளத்தில் உள்நுழையவும்
- ஆன்லைனில் உங்கள் வாக்கைப் பதிவு செய்யவும் – இது பாதுகாப்பானது, நம்பகமானது மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்தது




## முக்கியமான தகவல்

- இந்த வாக்களிப்பு PIN இக்கடிதம் யாருக்கு அனுப்பப்பட்டுள்ளதோ அந்த வாக்காளருக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது; அதை அந்த வாக்காளரால் மட்டுமே பயன்படுத்த முடியும்.
- உங்கள் வாக்களிப்பு PIN-ஐ ஒருபோதும் பிறருடன் பகிர வேண்டாம் – அது உங்களுக்குரியது.
- உங்கள் வாக்களிப்பு PIN-ஐப் பகிருமாறு யாராவது கேட்டால், உடனடியாக Elections Markham - ஐத் தொடர்புகொள்ளவும்.
- தகுதியற்றவராக இருந்தால் வாக்களிப்பது, ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச்சீட்டுகளில் வாக்களிப்பது, அல்லது பிறரின் வாக்களிப்பு PIN-ஐ பயன்படுத்துவது சட்டவிரோதமாகும்.
- மார்க்கம் நகரில் நீங்கள் எத்தனை சொத்துகளை வைத்திருந்தாலும் அல்லது வாடகைக்கு எடுத்திருந்தாலும், இந்தத் தேர்தலில் ஒருமுறை மட்டுமே வாக்களிக்க முடியும்.
- உங்கள் வாக்குச்சீட்டுடன் எடுத்த புகைப்படம் அல்லது செல்ஃபியை சமூக ஊடகங்களிலோ வேறு இடங்களிலோ பதிவிட வேண்டாம்.
- வேட்பாளரின் கணினி, ஸ்மார்ட்போன் அல்லது டேப்லெட்டைப் பயன்படுத்தி வாக்களிக்கவோ, நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதற்கான ஆதாரத்தை யாருடனும் பகிரவோ வேண்டாம்.

**மேலும் தகவல்களுக்கு மறுபக்கத்தைப் பார்க்கவும்.**

## வாக்களிப்பதற்கான பிற வழிகள்

**வாக்களிக்கும் இடத்தில்:** அக்டோபர் 23 முதல் 26 வரை | காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை (ET)

| **எந்தவொரு வாக்களிக்கும் இடத்திலும் நேரில் வாக்களிக்கவும்** | **முகவரி** | **அக்டோபர் 23 முதல் 25 வரை** காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை (ET) | **அக்டோபர் 26** காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை (ET) |
|---|---|---|---|
| Aaniin Community Centre | 5665 14th Avenue | ✓ | ✓ |
| Angus Glen Community Centre | 3990 Major Mackenzie Drive East | ✓ | ✓ |
| Cornell Community Centre | 3201 Bur Oak Avenue | ✓ | ✓ |
| Centennial Community Centre | 8600 McCowan Road | ✓ | ✓ |
| Milliken Mills Community Centre | 7600 Kennedy Road | ✓ | ✓ |
| Thornhill Community Centre | 7755 Bayview Avenue | ✓ | ✓ |
| Flato Markham Theatre | 171 Town Centre Boulevard | | ✓ |
| Markham Village Community Centre | 6041 Highway 7 | | ✓ |
| Mount Joy Community Centre | 6140 16th Avenue | | ✓ |
| Varley Art Gallery of Markham | 216 Main Street Unionville | | ✓ |

* அனைத்து வாக்களிக்கும் இடங்களும் அணுகல் வசதியுடன் உள்ளன

### Elections Markham தலைமை அலுவலகத்தில்

செப்டம்பர் 28 முதல் அக்டோபர் 22 வரை (திங்கள முதல் வெள்ளி வரை)
| காலை 8:30 மணி முதல் மாலை 4:30 மணி வரை (முன்பதிவு அவசியம்)

- Markham Civic Centre, 101 Town Centre Boulevard -இல் சிறப்பு வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்கவும்
- முன்பதிவு செய்ய ElectionsMarkham.ca/WaysToVote என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்

**வாக்களிப்பதற்கான அடையாள ஆவணம்:** நேரில் வாக்களிக்க நீங்கள் தேர்வு செய்தால், உங்கள் பெயர் மற்றும் முகவரி இடம்பெற்றுள்ள அடையாள ஆவணத்தைக் கொண்டு வரவும். ஏற்றுக்கொள்ளப்படும் அடையாள ஆவணங்களில் ஓட்டுநர் உரிமம், புகைப்பட அடையாள அட்டை, அடமானம் அல்லது வாடகை ஒப்பந்தம், பயன்பாட்டுக் கட்டணப் பட்டியல் மற்றும் வங்கி அல்லது கிரெடிட் கார்டு அறிக்கை ஆகியவை அடங்கும்.

## எங்களைத் தொடர்புகொள்ளவும்

905.477.7000 x8683 (VOTE) திங்கள் முதல் வெள்ளி வரை:
காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை | வாக்களிக்கும் நாட்களில்: காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை

vote@markham.ca

ElectionsMarkham.ca

**2026 மார்க்கம் நகராட்சி தேர்தல் தொடர்பான சமீபத்திய மற்றும் மிகவும் நம்பகமான தகவல்களுக்கான அதிகாரப்பூர்வ ஆதாரம் Elections Markham இணையதளமாகும்.**

## வாக்காளர் தகவல்கள் பின்வரும் மொழிகளில் கிடைக்கின்றன

**Farsi**
برای کسب اطلاعات بیشتر در مورد انتخابات شهرداری Markham و نحوه رای دادن، به ElectionsMarkham.ca مراجعه کنید.

**French**
Pour en savoir plus sur l'élection municipale de Markham et comment voter, visitez ElectionsMarkham.ca

**Simplified Chinese**
如欲了解关于万锦市选举及投票方式的更多信息，敬请浏览 ElectionsMarkham.ca

**Traditional Chinese**
如欲了解關於萬錦市選舉及投票方式的更多信息，敬請瀏覽 ElectionsMarkham.ca

**Punjabi**
ਮਾਰਖਮ ਨਗਰ ਪਾਲਿਕਾ (Markham Municipal) ਚੋਣਾਂ ਬਾਰੇ ਅਤੇ ਇਨ੍ਹਾਂ ਵਿੱਚ ਵੋਟ ਪਾਉਣ ਦੇ ਢੰਗ ਬਾਰੇ ਹੋਰ ਜਾਣਕਾਰੀ ਲੈਣ ਲਈ, ElectionsMarkham.ca 'ਤੇ ਜਾਓ।

**Tamil**
மார்க்கம் நகராட்சித் தேர்தல் குறித்தும், எவ்வாறு வாக்களிப்பது என்பது குறித்தும் மேலும் தகவல்களை அறிய, ElectionsMarkham.ca – ஐப் பார்வையிடுங்கள்.

**Urdu**
مارکم میونسپل الیکشن اور ووٹ ڈالنے کے طریقے کے بارے میں مزید معلومات کے لئے ElectionsMarkham.ca ملاحظہ کریں۔

கோரிக்கையின் பேரில் மாற்று வடிவங்களிலும் கிடைக்கும்